Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 7 (26-8-65) இதழ் 195

விசுவாவசு ஆவணி 10 ரபி: ஆகிர் பிறை 28 வியாழக்கிழமை

**முக்கிய அறிவித்தல்**

**மில்க்வைற் நீல சோப்**
தற்பொழுது
**புதிய ரசாயனப் பொருட்கள்**
சேர்க்கப்பட்டு
விற்பனை செய்யப்படுகிறது.

20 சதத்திற்கு எங்கும் கிடைக்கும்.
கூடிய உடுப்புகளை சலவை செய்யலாம்.
இன்றே வாங்கி பரீட்சித்துப்பாருங்கள்!

## இன்று பென்ஸ் சுவீப்

கொழும்பு, வியாழன்

மூன்ருவது ''பென்ஸ்'' சுவீப் இன்று மாலை இழுக்கப்படுகிறது.

இன்று இழுக்கப்படவிருக்கும் ஐம்பத்திரண்டாவது இலக்க தேசிய சுவீப்பில் முதற்பரிசு பெறுபவருக்கு ''பென்ஸ்'' கார் பரிசாகக் கிடைக்கும். மற்றைய பரிசுகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

# பட்ஜட்: இன்று வாக்கெடுப்பு

## எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் சிலரும் ஆதரவளிப்பர்?

கொழும்பு, வியாழன்

தேசீய அரசாங்கத்தின் முதலாவது வரவு-செலவுத்திட்டத்தின் மீதான வாக்கெடுப்பு இன்று இரவு எட்டு மணிக்கு நடைபெறும் வாக்கெடுப்பின் போது எதிர்க்கட்சியைச் சேர்ந்த சில எம். பி.க்கள் சாதகமாக வாக்களிப்பார்கள் என நம்பப்படுகிறது.

இம்மாதம் ஒன்பதாம் திகதி நிதிமந்திரி திரு. யு. பி. வன்னிநாயக்கா, தேசீய அரசாங்கத்தின் முதலாவது பட்ஜட்டை பார்லிமென்டில் சமர்ப்பித்திருந்தார்.

பட்ஜட் மீதான விவாதம் கடந்த பதினெட்டாம் திகதி ஆரம்பமானது.

கடந்த வாரத்தில் நடைபெற்ற விவாதத்தின் போது எதிர்க்கட்சி அங்கத்தவர் சிலர் பட்ஜட்டுக்கு ஆதரவு தெரிவித்துப் பேசினர்.

இன்று இரவு எட்டு மணிக்கு வாக்கெடுப்பு நடைபெறும் பொழுது அநேகமாக எதிர்க்கட்சியைச் சேர்ந்த மூன்று எம். பி.க்கள் பட்ஜட்டை ஆதரித்து வாக்களிப்பார்கள் என நம்பப்படுகிறது.

## ''மீனவர்களை தாக்கி பாதுகாப்பில் வைத்துள்ளனர்''

### நடவடிக்கை எடுக்குமாறு இந்திய ஹைகமிஷனருக்கு தந்தி

மன்னார், புதன்

இலங்கையின் கரையிலிருந்து 12 மைல்களுக்கப்பால் மீன்பிடித்துக் கொண்டிருந்த 5 மீன்பிடியாளர்களை இலங்கை இராணுவத்தினர் கைது செய்து அவர்களை அடித்துத்துன்புறுத்தி ''கள்ளத்தோணி'' என்ற பட்டத்தையும் சூட்டி பாதுகாப்பு முகாமில் அடைத்து வைத்தருக்கிறார்களென்றும் இது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கும் படியும் கேட்டு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், நியமன எம். பி. யுமான திரு. எஸ். தொண்டமானுக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மன்னார் மாவட்ட பிரதிநிதி திரு. வேலுசாமி அவசரத் தந்தியொன்றை அனுப்பியுள்ளார். இதே போன்ற தந்தியொன்று இந்தியக் ஹைக் கமிஷனருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

இம்மாதிரியாக இனியும் நடக்காமல் பார்த்துக் கொள்ளும்படி பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியையும், குடியேற்றக் கட்டுப்பாட்டு அதிகாரியையும் கேட்டுக் கொள்ள வேண்டுமென்றும் திரு. தொண்டமானை திரு. வேலுசாமி அவசரத்தந்தி மூலம் கோரியுள்ளார்.

## கணவன் மரணம்: மனைவி கைது!

யாழ்ப்பாணம், வியா.

பூநகரிக்கு சில மைல் தூரத்திலுள்ள கிருஞ்சியைச் சேர்த்த வேலாயுதம் மாரிமுத்து (வயது 42) என்றதோட்டக்காவலாளர் ஒருவர் மரணம் சம்பந்தமாக அவரது மனைவி குஞ்சரம் (வயது 29) என்பவரைக் கைதுசெய்யுமாறு திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு. ஏ. அமிர்தலிங்கம் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

தேசியசேமிப்பு வங்கி கமிஷனர் திரு. சச்கிதானந்தத்தின்தென்னந்தோட்டத்தில் காவலாளராக வேலை பார்த்துவந்த மாரிமுத்து சென்ற ஞாயிற்றுக் கிழமை மாலை தமது வீட்டுக்கு ஒரு போத்தலில் கள்ளும் மற்றப்போத்தலில் சாராயமும் கொண்ட இரு போத்தல்களைக் கொண்டு வந்ததாகவும் கள்ளை அருந்தியபோது தமக்கு மயக்கம் வருவதாகச்சொல்லி சிறிதுநேரத்தில் நிலத்தில் விழுந்து மரணமானதாகவும் விசாரணையின் போது தெரியவந்தது.

மரணவிசாரணையின் போது இறந்தவரின் மனைவி குஞ்சரம் கூறியதாவது.

''கடந்த ஒரு வருடகாலமாக நாங்கள் தோட்டத்திலேயே வசித்துவந்துள்ளோம். எனக்கும் எனது கணவருக்குமிடையில் எவ்வித தகராறும் ஏற்பட்டிருக்கவில்லை. சென்ற ஞாயிற்றுக்கிழமை பகல் 9 மணியளவில் கிருஞ்சிடவுணுக்கு மகன் மூர்த்தியையும் கூட்டிக்கொண்டு சென்றார். பகல் 11 மணிக்கு மகன் தனியேவந்தார். எனது கணவர் சம்புவில் கள் குடித்துக்கொண்டிருப்பதாகவும் பின்னர் வீடு வருவதாகச்சொன்னதாகவும் எனது மகன் கூறினார். நாங்கள் மாலை 5 மணிவரை அவருக்காகக் காத்திருந்தோம். அவர் 5 மணியளவில் ஒரு போத்தலில் கள்ளும் மற்றப் போத்தலில் சாராயமுமாக இரு போத்தல்கள் தம்முடன் கொண்டு வந்திருந்தார். கள்ளை அருந்திக்கொண்டே தமக்கு ஏதோ செய்வதாகத் தெரிவித்தார். அப்படியெனில் குடியாமல் விடும்படி நான் கூறினேன். அவர் 'அதுகாசு கொடுத்து வாங்கினது' என்று சொல்லி மேலும் குடித்தார். இதன்பின் சாராயத்தையும்குடித்தார். சிறிது நேரத்தில் வாந்தி எடுத்து மயக்கமுற்று வீட்டு முற்றத்தில் விழுந்து பின் மரணமானார். நான் இது பற்றி பொலிஸாருக்குத் தெரிவித்தேன்.

இறந்தவரின் மகன் மூர்த்தியும் (வயது 11) இது போன்றே சாட்சியமளித்தார். இறந்தவரின் மற்றொரு மகனை சந்தானம் (வயது 9) சம்பவம் நடைபெற்றபோது சாவகச்சேரியில் இருந்தார்.

பிரேத பரிசோதனை நடத்திய டாக்டர் ஏ. ரி. நல்லையா நஞ்சருந்தியதால் ஏற்பட்ட மரணம் என்றும் இறந்தவரின் வயிற்றில் சோறு காணப்பட்டதென்றும் அச்சோறு மரணமடைவதற்கு 3 மணி நேரத்திற்குமுன் சாப்பிட்டிருக்கவேண்டுமென்றும் பிற்பகக 2 மணிக்குப் பின்னர் இறந்தவர் அதை சாப்பிட்டிருக்கலாமென்றும் தெரிவித்தார்

இறந்தவரின் மரணம் சம்பந்தமாகத் தெரிவிக்கப்பட்ட சாட்சியங்கள் சந்தேகத்துக்கிடமானதாக இருப்பதால் தீர்ப்பு வழங்காது மனைவியை கைது செய்யுமாறுமரணவிசாரணை அதிகாரி திரு. அமிர்தலிங்கம் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். பொலிஸார் இதுசம்பந்தமாகத் தொடர்ந்து புலன்விசாரணை செய்து வருகின்றனர்.

## ஆர். ஜி. குற்றச்சாட்டு

கொழும்பு, புதன்

தேசீய அரசாங்கம்தேசீய அபிவிருத்திக்காக ஏற்படுத்தப்படவில்லையென்றும் அதிலுள்ளவர்கள் தமது சொந்த நலனுக்காகவே இவ்வித அரசாங்கத்தை அமைத்துள்ளார்களென்றும் தம்பதெனியா எம். பி. திரு. ஆர். ஜி. சேனநாயக்கா ஜனப்பிரதிநிதிகள் சபையில் குற்றஞ்சாட்டினார்.

ஜனப்பிரதிநிதிகள் சபையில் வரவுசெலவுத்திட்ட விவாதத்தின்மீது பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

திரு, ஆர். ஜி. மேலும் பேசுகையில், மந்திரிசபைக்குள் ஒற்றுமை கிடையாது என்றும் ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. திருச்செல்வம் அரசாங்கத்துக்கெதிராக ஒரு போராட்டத்தை உள்ளுக்குள்ளேயே இருந்துகொண்டு நடத்தி வருவதாகவும் தெரிவித்தார்,

தமிழர்களுக்கு அதிக சலுகையை தேசிய அரசாங்கம் அளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

''அடுத்தமாதத்திலிருந்து

## ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தம் அமுலாக்கப்படும்''

### திரு. தொண்டமான் பேச்சு

நுவரெலிய, புதன்

ஸ்ரீமா—சாஸ்திரி ஒப்பந்தம் அடுத்த மாதத்திலிருந்து அமுல்நடத்தப்படுமென்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், நியமன எம். பி. யுமான திரு எஸ். தொண்டமான் வரவேற்புக் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

நுவரெலியா நகரமண்டபத்தில் திரு எஸ். தொண்டமானுக்கும், நுவரெலியாஎம் பி. திரு டொனல்ட் ரத்தினவீராவுக்கும் ஒருபொது வரவேற்பளிக்கப்பட்டது. அக்கூட்டத்தில் பேசும்போதே திரு. தொண்டமான் மேற்கண்டவாறு கூறினார்.

ஸ்ரீமா—சாஸ்திரி ஒப்பந்தம் அமுல் நடத்தப்படும் போது எங்களுடைய பூரண ஒத்துழைப்பைக் கொடுப்போமென்றும் திரு. தொண்டமான் தெரிவித்தார்.

தேசீய அரசாங்கத்தின் முன்னேற்றமான கொள்கைகளைக் குலைத்துவிட வீணான பொய்ப்பிரசாரங்களை மக்களிடையே சில வகுப்புவாத அரசியல் வாதிகள் கூறி வருகிறார்களென திரு. தொண்டமான் குற்றஞ்சாட்டினார்.

நுவரெலியா எம். பி. திரு டொனல்ட் ரத்தினவீரா பேசுகையில் தேசீய அரசாங்கத்தின் 'பட்ஜட்' ஏழை எளியவர்களுக்கு வாழ்வழிக்கக் கூடிய விதத்தில் அமைந்துள்ளதென்றும், விரைவில் இன்னும்பல அத்தியாவசியமான பொருட்களின் விலைகள் குறைக்கப்படுமென்றும் கூறினார்.

### வகுப்புவாதத்துக்கு கண்டனம்

நாட்டில் வகுப்புவாதம் பரப்பப்படுவதை வன்மையாகக் கண்டித்த திரு. ரத்தினவீரா, தேசீய அரசாங்கம் எவ்விதமான வகுப்புவாதத்தையும் தனது சக்தியால் தகர்த்தெறியுமென உறுதி கூறினார்.

## ''சிறுபான்மை இனத்தவர்கள் அடிமைகளல்ல''

### சமூகசேவா மந்திரி கருணரத்ன விளக்கம்

கொழும்பு, புதன்

''இந்த நாட்டிலுள்ள பெரும்பான்மைச் சமூகத்தவர் ஆட்சி செலுத்துபவர்களாகவும், சிறுபான்மை இனத்தவர்கள் அடிமைகளாகவும் இருப்பதை நாம் விரும்பவில்லை. ஜனநாயக அடிப்படையில் இங்கு சகல இனத்தவர்களும் அன்னியோன்யமாக வாழ்வதையே நாம் விரும்புகிறோம்.''

இவ்வாறு சமூகசேவா மந்திரி திரு. அசோகா கருணரத்ன நேற்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் தெரிவித்தார்.

திரு. கருணரத்ன மேலும் பேசுகையில் கூறியதாவது:

காலஞ்சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயக்காவின் மொழிக் கொள்கையையே எமது அரசாங்கமும் அனுஷ்டித்துவருகிறது. இதில் மாறுதல்கிடையாது.

இந்த நாட்டில் வாழும் மக்களைக் கூட்டுச்சேர்த்து நாட்டின் முன்னேற்றத்துக்கு வழியமைப்பதே எமது நோக்கம். இந்த நோக்கத்துடனேயே நாம் முயற்சிகள் மேற்கொண்டுவருகின்றோம்.

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

நம் மனதை நம்மால் சுத்திசெய்ய முடியாது. இறைவனே தூய்மையாக்க வேண்டும். குழந்தையைப்போல் நாம் அவரிடம் செல்ல வேண்டும். அழுக்குடன் செல்லும் குழந்தையை அன்னை குளிப்பாட்டி, நல்ல உடை அணிவிக்கிருளல்லவா? அந்த அன்னையைவிட இறைவன் மக்களாகிய நம்மீது அதிக அன்புள்ளவராவர்.

— சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

FELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஆவணிமீ 9 உ (26-8-65)


## பெரும் ஏமாற்றம்

தமிழ்ப் பகுதியிலே ஒரு பல்கலைக்கழகத்தை அமைக்கவோ அல்லது 'கம்பஸ்' எனும் பல்கலைக்கழக வகுப்புகளை நடத்தவோ முடியாதென்று பல்கலைக்கழக செனட்சபை செய்துள்ள தீர்மானம் இப்பகுதியிலுள்ள மக்களுக்குப் பெரும் ஏமாற்றம் அளிப்பதாகும். தெற்கே காலியிலும் இவ்வித வகுப்பு நடத்த முடியாதென்று தீர்மானித்துள்ளது உண்மையே. தமிழர்களின் நியாயமான இந்தக் கோரிக்கையை கல்வி அமைச்சர் வேண்டுமென்று மறுத்துள்ளாரென்றும் நாம் கூறவில்லை. ஆனுல் தமிழரிடையே அதிக ஒற்றுமை இருந்திருப்பின் ஏற்கெனவே இதுபற்றிச் செய்யப்பட்ட வாக்குறுதி நிறைவேறி இருப்பது சாத்தியமென்று எண்ணத் தோன்றுகின்றது. தமிழ்த் தலைவர்களிடையே ஒற்றுமையும், ஒத்துழைப்பும் இல்லாமற் போவதால் தமிழ்ப் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய கஷ்ட நஷ்டங்களுக்கு இது ஓர் உதாரணமாகும்.

போதிய ஆசிரியர்களும் வேறு வசதிகளும் இல்லாததால்தான் அந்தத் திட்டத்தை அமுல் நடத்த முடியவில்லையென்று காரணம் சொல்லப்படுகின்றது. தமிழ்க் கலைப்பாடமெடுத்த மாணவர்களை பேராதனையிலும் சிங்கள பாடமெடுத்த அதிகப்படி மாணவர்களைக் கொழும்பிலும், வித்யோதய, வித்யாலங்கார சர்வகலாசாலைகளிலும் சேர்த்துக் கொள்வதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாம். யாழ்ப்பாணத்தில் சர்வகலாசாலை 'கம்பஸ்' வகுப்பு ஆரம்பிக்கப்பட்டிருந்தால், இப்பகுதியிலுள்ள தமிழ்க் கலைப்பாட மாணவர்கள் இங்கேயே இருந்து படிக்க முடியும். கண்டிக்குச் சென்றுபடிப்பதென்ருல் ஒரு மாணவருக்கு மாதமொன்றுக்கு ரூ. 150 வேண்டியிருக்கும். நடுத்தர குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு இது எவ்வளவு சங்கடமென்பதை விளக்கத் தேவையில்லை.

சுதந்திரமடைந்த பின் இந்தியாவில் புதுப்புது சர்வகலாசாலைகள் எவ்விதம் ஸ்தாபிக்கப்படுகின்றனவென்பதைக் கவனிப்பின், இலங்கையில் இவ்விஷயம்பற்றி யாரும் பெருமை கொள்ள முடியாது. இங்கு ஆரம்ப முதல் கடைசிவரை இலவசக்கல்வி பல்லாண்டுகளாக அளிக்கப்படுகின்றது. அதனுல் ஏழை மாணவர்களுக்கும் கல்வி கற்க வாய்ப்பு ஏற்பட்டு, மாணவர்களின் எண்ணிக்கையும் வருடாவருடம் அதிகமாகப் பெருகி வருகிறது. இதனுல் உயர்தரக்கல்வி கற்க அதிகமான மாணவர்கள் தகுதி பெறுகின்ருர்கள்.

அப்படித் தகுதிபெற்ற மாணவர்களுக்கு, சர்வகலாசாலைக் கல்வி பயில வேண்டிய வசதிகளைச் செய்ய வேண்டியது அரசாங்கத்தின் முக்கிய கடமை. எக்காரணம்பற்றியும் இதைச் செய்யத் தவறுவது, நம் எதிர்கால சந்ததியாருக்குச் செய்யும் குற்றமாகும். இடமில்லை என்ற காரணத்தால் புகுமுகப் பரீட்சைகளையும் அதிகக் கடுமையாக்கி உண்மையில் தகுதியுள்ள மாணவர்களில் பலரையும் உயர்தரக்கல்வி பயில முடியாதபடி தடுத்துவிடக்கூடாதென்பதே பொதுமக்கள் கவலை.

அரசாங்கத்தால் இப்பொறுப்பைநிறைவேற்றி வைக்க முடியாவிடின், பொதுமக்களையும், சிறப்பாகப் பல தனிப்பட்ட கல்வி ஸ்தாபனத்தாரின் உதவியையும் ஒத்துழைப்பையும் கேட்டுப் பெறலாம். வடபகுதியில் சர்வகலாசாலை வசதி செய்யப்படாதது இப்பகுதி மாணவர்களுக்கும் சிறப்பாக ஏழைகளுக்கும் நீதி செய்வதாகாது. தமிழ்ப் பிரதிநிதிகள் தங்களிடையே கலந்து பேசி, இதைப்பற்றி அரசாங்கம் புனராலோசனைசெய்யவும், கூடிய சீக்கிரத்தில் வடபகுதியின் குறையைத் தீர்க்கவும் ஆகக்கூடிய முயற்சிகளை எடுக்க வேண்டும். ஒற்றுமையாக இக்கோரிக்கையைக் கேட்பின், அரசாங்கம் அதை மறுக்காமல் எப்படியாவது நிறைவேற்றி வைக்க முன்வருமென்பதே நமது நம்பிக்கை. மனமுண்டாயின் நிச்சயம் மார்க்கமுண்டு.

## உலகத்துக்கு உலகப் படங்கள்

லண்டன், ஆக. 25

எட்டு அத்தியாயங்களைக் கொண்ட புதிய உலகத் தேசப்படப் 'புத்தகமொன்றை ஜெர்மன் ஜனநாயகக் குடியரசிலுள்ள தேசப் படத் தயாரிப்பு நிலையம் தயாரித்து வருகிறது. இதன் முதலாவது அத்தியாயம் விரைவில் வெளியாகும். எல்லா அத்தியாயங்களும் 1968-ல் வெளியாகும். மிகப் பெரிய உலகத் தேசப் படப் புத்தகம் 200 தேசங்களைக் கொண்டதாகும்.

1954-1963-ல் இந்த நிலையம் 50 லட்சம் தேசப் படப் புத்தகங்களை வெளியிட்டது. கடந்த 5 ஆண்டுகளில் ஜப்பான், பிரிட்டன், அமெரிக்கா முதலிய நாடுகளுக்கு இந்த நிலையத்திலிருந்து 60,000 தேசப் படங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

# கிராமப்புற திட்டங்களை வகுத்து உங்கள் பிரச்னைகளை தீருங்கள்

## கலாயோகிக்கு செய்யும் கைமாறு அதுவே என்கிறுர் ஸ்தானிகர்

பம்பலப்பிட்டி, புதன்

[கலா யோகி ஆனந்த குமாரசுவாமி ஞாபகதினக் கூட்டத்தில் அமெரிக்க ஸ்தானிகர் திரு. சிசில் பி. லெயோன் பேசிய பேச்சின் சாரம்]

கலா யோகி ஆனந்த குமாரசுவாமியின் ஞாபகார்த்தக் கூட்டத்தில் பங்குபற்றிக்கொண்டதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். ஆனந்த குமாரசுவாமி ஒரு சிறந்த இலங்கையர். கலா யோகி குமாரசுவாமி கலை வரலாற்று அறிஞராகமட்டுமல்லாது தத்துவஞானியாக, மொழிநூலறிஞராக, ராஜதந்திரியாக விடுதலை வீரராகவும் திகழ்ந்தார். அவரின் திறமையினுல்கீழைத் தேசத்தவர்களையும் மேலைத் தேசத்தவர்களையும் ஒன்றுபடுத்திஞர். கலை நூல் ஆய்வின் காரணமாக ஆனந்த குமாரசுவாமி மாறுபட்ட சிந்தனைக்கும் வேறுபட்ட கருத்துக்கும் ஆளானுர். இதன் காரணமாக முற்காலத்தில் தினசரி பாவனைக்காகச் செய்யப்பட்ட சில சாதாரண பொருட்கள்; தரத்தில் உயர்ந்தும் பிற்காலத்தில் செய்யப்பட்ட மற்றப் பொருட்கள் தரத்தில் குறைந்தும் இருக்கின்ற காரணங்களை ஆனந்த குமாரசுவாமி ஆராய்ந்தார். முற்காலத்தில் செய்யப்பட்ட பொருட்கள் பாவனைக்காகச் செய்யப்பட்டவை என்றும் மற்றப் பொருட்கள் தொழிற்சாலைகளினுல் வியாபாரத்திற்காகச் செய்யப்பட்டவைகள் என்று அவர் உணர்ந்தார்.

ஸ்தானிகர் என்ற முறையில் குமாரசுவாமியின் திறமையை நான் பெரிதும் பாராட்டுகிறேன். அவரின் கருத்துக்களிலும் நூல்களிலும் மேற்கு-கிழக்குபற்றிய ஒற்றுமையையும் தோழமையையுமே வற்புறுத்தியுள்ளார். திரு. ஆனந்த குமாரசுவாமியைப்போல முன்னர் எவரும் இவ்வளவு திறமையாகவும் நுணுக்கமாகவும் நம் கிழக்கு நாட்டின் கலைகளையும் பண்புகளையும் மேற்கு நாடுகளுக்கு அறிமுகப்படுத்தவில்லை. அத்துடன் பௌத்தசமயக் கொள்கைகளையும் மேற்கு நாடுகளில் அவர் சிறந்த முறையில் ஊட்டினுர். குமாரசுவாமியின் தகப்பனுர் இலங்கையராகவிருந்த காரணத்தினுலும் தாயார் ஆங்கில மாதுவாகவிருந்த காரணத்தினுலுமே இவர் இச்சேவையைத் திறம்படச் செயலாற்ற முடிந்தது. கிழக்கு நாடுகளின் கலாச்சாரப் பிரதிநிதியாகவும் சைவ, பௌத்த, இஸ்லாமிய சமயங்களின் தத்துவங்களை மேற்கு நாடுகளுக்கு எடுத்துரைக்கும் வல்லுநராகவும் குமாரசுவாமி விளங்கினுர்.

கலா யோகி ஆனந்த குமாரசுவாமி தனது 23வது வயதையடையு முன்னரே 500 வெளியீடுகளைப் பிரசுரித்திருந்தார். தனது இளமைப்பருவத்திலேயே அவர் 'பூர்வீக சிங்களக்கலை' என்னும் நூலையும் எழுதியிருந்தார். நான் இலங்கைக்கு ஸ்தானிகராக நியமிக்கப்பட்டதும் பொஸ்டனில் குமாரசுவாமியின் 30 ஆண்டு வாழ்க்கையே எனக்கு நினைவு வந்தது.

''சிவனின் நடனம்'' என்ற நூலில் மனிதனின் பொக்கிஷம் மனிதனே என்ற உண்மையை கலா யோகி எடுத்துக்காட்டியுள்ளார். மேலும் ஐரோப்பா தேசத்திலுள்ள சிந்தனையாளர்கள் கிழக்கு நாடுகளிலுள்ள தத்துவஞானிகளுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளவேண்டிய அவசியத்தையும், அந்நூலில் அவர் வலியுறுத்தி யிருக்கிறுர். அமெரிக்காவிலும் மற்றைய ஐரோப்பிய தேசங்களிலுமுள்ள இயந்திரத் தொழில் அமைப்புப் பற்றி

(6-ம் பக்கம் பார்க்க)

# 'இலக்கிய பணியை தொடர்ந்து செய்வேன்'

## பிரிவுபசார வைபவத்தில் டாக்டர் நந்தி

யாழ்ப்பாணம், வியா,

'இலக்கியத்தில் சமரசவாதமென்ப தொன்றில்லை. உண்மையான இலக்கியக்காரன் சமரசவாதியுமல்ல, உலகத்தினதும், நாட்டினதும் விவகாரங்களைக் கவனித்து, மனிதத்தன்மைகளுக்காக அவன் எழுதும்போது அங்கு சமரசத்திற்கிடமேது. அநியாயக்காரனையும், அநியாயத்திற்கு ஆட்படுபவனையும் சமரச நிலைக்குக்கொண்டுவர அவன் முயல்வானுனுல் அவன் நிதானமான இலக்கிய சேவை செய்தவனுகவேமாட்டான்'

சென்ற திங்கட்கிழமை யாழ்ப்பாணம் புளூறிபன் ஹோட்டலில் டாக்டர் செ. சிவஞானசுந்தரத்துக்கு (நந்தி) அளிக்கப்பட்ட விருந்துபசாரப் பிரியாவிடைக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப்பேசிய திரு. கே. டானியல் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கை முற்போக்கெழுத்தாளர் சங்கத்தால் தமக்களிக்கப்பட்ட விருந்துபசாரத்திற்கு நன்றிதெரிவித்துப்பேசும்போது டாக்டர் நந்தி குறிப்பிட்டதாவது:-

எனது இலக்கிய சேவை தொடர்ச்சியாகவே இருக்கும். எங்கும், எப்போதும் [illegible] எனது பேனவைப்பாவித்து வந்திருக்கிறேன். இனியும் அப்படித்தான் பாவிப்பேன். என்னை ஒரு டாக்டராகப் பார்ப்பதைவிட, மக்கள் என்னை ஒரு எழுத்தாளனுகக் காண்பதிலேயே நான் எப்போதும் பெருமை அடைவேன். இந்தவேளை எனது சக எழுத்தாளர்களுக்கு எனது வேண்டுகோள், ஜனரஞ்சகமாக இலக்கியப்பணியை நாம் மேற்கொள்ளும் அதேவேளை, சில அவசரக்காரர்கள் ஏதோ அற்ப ஆசைகளுக்கு ஆட்பட்டு, தரமற்ற சிருஷ்டிகளைப்புத்தகஉருவத்தில் வெளியிடுவது மிகவும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும், மக்களுக்காக இலக்கியம் செய்யும் அதே வேளை அதன் தரத்தையும் கீழ் போக விடாமல் நாமும் பாதுகாத்துக்கொள்ளல் அவசியம். இதை உணர்ந்து நல்ல சிருஷ்டிகளை மட்டும் நூல் உருவம் பெறுவதற்கான நிலைகளை எழுத்தாளர்களிடையே வளர்க்க நாம் தொடர்ந்து பணியாற்ற வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

திரு. சொக்கன், திரு. செ. யோகநாதன், திரு. ஈ. பி. இராசையா, திருமதி உருத்திரா கந்தசாமி, திரு. கனகரத்தினம், திரு. [illegible]னிக் ஜீவா ஆகியோரும் பேசினர்.

## இசைவிழா

யாழ்ப்பாணம், வியா.

அளவெட்டி இசைக்கலை மன்றத்தினரின் இசைவிழா இம்மாதம் 27-ம், 28-ம் திகதிகளில் நடைபெறவிருக்கிறது. அளவெட்டி கும்பளாவளைப் பிள்ளையார் கோயில் வடக்கு வீதி அரங்கில் இசைவிழா நடைபெறும்,

அருணோதயக் கல்லூரி அதிபர் திரு. எஸ். சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் முதல் நாள் விழாவில் திருமதி சரஸ்வதி பாக்கியராசா, திரு. ராம் குமாரசாமி, திரு. என். சண்முகரத்தினம் ஆகியோர்கலந்துகொள்ளுகின்றனர்.

திரு. சி. எஸ். எஸ். மணி பாகவதரின் தலைமையில் நடைபெறும் இரண்டாம் நாள் விழாவில் திரு. சுந்தரமூர்த்தி கோஷ்டியினரின் நாதஸ்வரஇசையும், செல்வி மாது சிரோன்மணி வேலாயுதரின் பாட்டும், திரு. வீரமணி ஐயரின் சொந்த சாகித்தியமும் இடம்பெறும், இரண்டாம் நாள் விழாவின் மாலை நிகழ்ச்சிகள் திரு. எஸ். கனகசபை தலைமையில் நடைபெறும். திருமதி பூமணி இராசரத்தினம், திரு. பரம்தில்லைராசா, திரு. ஆர். நடராசா, திரு. ஏ. ஜி. ஐயாக்கண்ணு தேசிகர் ஆகயோரின் இசைக்கச்சேரியும், திரு. பாலகிருஷ்ணன் கோஷ்டியாரின் நாதஸ்வரஇசையும், கொக்குவில் கலாபவன மாணவிகளின் நடனக்கச்சேரியும் இடம் பெறும்.

## "குறுகிய எண்ணம் எமக்கு வேண்டாம்"

— மந்திரி பீரிஸ்

திருக்கோணமலை, புதன்

''கடந்தகால அரசாங்கங்கள் விட்ட பிழைகளை தேசிய அரசாங்கம் விடமாட்டாது. குறுகிய எண்ணங்களும், இனபேதமுமே எம் நாட்டை முன்னேற விடாமல் தடுத்தன. குறுகிய எண்ணங்களினுல் தான் பல பிரச்னைகள் தோன்றுகுன்றன. பரந்த மனப்பான்மையுடன் நாம் அப்பிரச்னைகளை மனிதத்தன்மையுடன் தீர்த்து வைக்கலாம்.''

இவ்வாறு கூட்டுறவு,வர்த்தக மந்திரி டாக்டர் எம். வி. பி. பீரிஸ் யு. என். பி.க் கிளையினரால் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பின் போது பேசுகையில் கூறினுர். கூட்டத்துக்கு டாக்டர். கே. சண்முகம் பிள்ளை தலைமை தாங்கினுர். மந்திரி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

''பொதுமக்களின் நலனைப் பாதுகாப்பதற்கு ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு இயக்கம், பொதுமக்களின் நலனைப் பாதிக்கக்கூடிய வகையில் நடந்துகொண்டால் அத்தகைய கூட்டுறவு இயக்கங்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க நான் தீர்மானிந்திருக்கிறேன். பொருளாதாரச் சிக்கலில் சிக்கியுள்ள இலங்கையை மீண்டும் பொருளாதார வளம்மிக்க நாடாக்கும் நோக்குடனேயே பிரதமர் பதவியை திரு. டட்லிசேனநாயகா ஏற்றுள்ளார். வருங்காலத்தில் கூட்டுறவு இயக்கம் சிறந்துவிளங்கும் என்பதில் சந்தேகமேயில்லை.

## புதிய சமாதான நீதவான்

சுழிபுரம், வியா

சித்தங்கேணியைச் சேர்ந்த முத்துக்குமாரு அருணுசலம் புதிய சமாதான நீதவானுக நியமிக்கப்பட்டுள்ளார். இளைப்பாறிய அரசாங்க உத்தியோகஸ்தரான இவர் பிரபல சமூக சமய சேவையாளராவர்,

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

காஷ்மீர் போர்நிறுத்த கோட்டுக்கு

# ரால்ப்பஞ்ச்சை அனுப்பும் யோசனையை யுதாண்ட் கைவிட்டார்

## இந்தியா, பாகிஸ்தானின் நிபந்தனைகளே காரணம்

### 'காஷ்மீரில் அமைதிக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது'

— யுதாண்ட்

நியுயோர்க், ஆக. 25

பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் தமது உதவிக் காரியதரிசி டாக்டர் ரால்ப் பஞ்ச்சை அனுப்பும் யோசனையை ஐக்கிய நாடுகள் தலைமைக் காரியதரிசி யுதாண்ட் கைவிட்டார்.

காஷ்மீரில் அமைதிக்கு பெரும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக யுதாண்ட் கருத்து வெளியிட்டுள்ளார்.

நெருக்கடி நீடித்துவரும் காஷ்மீரில், போர் நிறுத்தக் கோட்டைச் சென்று பார்க்கவும் காஷ்மீர் சம்பவங்கள் குறித்து இந்திய, பாகிஸ்தான் அரசாங்கங்களுடன் பேச்சுக்கள் நடத்தும்பொருட்டும் தமது உதவிக் காரியதரிசி டாக்டர் பஞ்சை அங்கு அனுப்புவதென்று யுதாண்ட் முன்னர் தீர்மானித்திருந்தார். ஆனுல் தமது இந்த யோசனையை அவர் கைவிட்டுவிட்டதாக இப்பொழுது அறிவிக்கப்பட்டுள்ளது.

டாக்டர் ரால் பஞ்ச் காஷ்மீர் பற்றி இரு அரசாங்கங்களுடன் பேச்சுக்கள் நடத்துவதற்கு இந்திய, பாகிஸ்தான் அரசாங்கங்கள் விதித்த நிபந்தனைகள் தான் யுதாண்ட் தமது யோசனையைக் கைவிட வேண்டி நேரிட்டதற்குக் காரணம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காஷ்மீர் சம்பவங்கள் குறித்துக் கவலைகொண்ட யுதாண்ட் காஷ்மீரிலுள்ள ஐ. நா. பிரதம பார்வையாளர் திரு. நிமோவை நியுயோர்க் வருமாறு அழைத்துள்ளார். திரு. நிம்மோவுடன் யுதாண்ட் விரிவாக ஆராய்வார் எனக்கூறப்படுகிறது.

**யுதாண்ட் கவலை**

காஷ்மீர் நிலைமை குறித்து கவலை தெரிவித்த ஐ. நா. பிரதம காரியதரிசி யுதாண்ட் அங்கு மோசமான நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார். 'காஷ்மீரில் அமைதி நிலவ வேண்டும். இப்படியான சூழ்நிலை உருவாகியிருப்பது வருந்தத்தக்கது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



## கைது!

### அஸாத் காஷ்மீர் முன்னுள் அதிபர்

ராவல்பிண்டி ஆக, 25

பாகிஸ்தான்வசமுள்ள அஸாத்காஷ்மீரின் முன்னுள் அதிபர் குர்ஷித் நேற்று ராவல்பிண்டியில் கைது செய்யப்பட்டார். இவர்மீது லஞ்ச குற்றச்சாட்டுக்கள்சுமத்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## "பாக். ஊடுருவல்காரர்கள் தப்பியோடுகிருர்கள்"

ஶ்ரீநகர், ஆக. 25

ஜம்மு காஷ்மீர் பள்ளத்தாக்கில் தாக்குதல்கள் நடத்திய பாகிஸ்தானிய ஊடுருவல்காரர்கள் இப்பொழுது குழப்பமும் கலகமும் அடைந்திருப்பதாக இங்கு கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

கடந்தசனிக்கிழமைபூஞ்ச் பகுதியில் போர்நிறுத்தக் கோட்டைக் கடந்து இந்திய பகுதிக்குள் நுழைந்த நான்கு பாகிஸ்தானிய ஊடுருவல்காரர்களை இந்திய படையினர் சுட்டதில் இருவர் ஸ்தலத்தில் மாண்டனர். மற்றுமிருவரும் தப்பியோடிவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் தாக்குதல்காரர்கள் இப்பொழுது புதிய நடவடிக்கையைக் கையாள்வதாகக் கூறப்படுகிறது. தாக்குதல் நடத்துவதைத் தவிர்த்து எப்படியும் தப்பியோடுவதையே அவர்கள் கையாண்டுவருவதாகத் தெரியவருகிறது.

நேற்று ஊடுருவல் செய்த பாகிஸ்தானியர் தப்பி ஓடியபொழுது இந்திய படைகளுக்கும் அவர்களுக்குமிடையே மோதல் ஏற்பட்டது. இந்த மோதலில் பலர் மாண்டதாக செய்திகள் கூறுகின்றன.

ஊடுருவல்செய்த பாகிஸ்தானியர்கள் இப்பொழுது தாக்குதல் வேலைகளில் ஈடுபடுகிருர்களில்லை என்றும் அவர்கள் தப்பியோடுவதில் தான் முனைந்திருக்கிருர்கள் என்றும் இங்கு கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

## புதியகைகலப்பில் பலர்மாண்டதாக "காஷ்மீர் குரல்" அறிவிப்பு

ராவல்பிண்டி, ஆக. 25

ஜம்மு காஷ்மீர் பள்ளத்தாக்கிலுள்ள மண்டி, ரஜுரி ஊரி, சம் ஆகிய இடங்களில் இந்திய படைகளுக்கும், காஷ்மீர் விடுதலைஇயக்கத்தினருக்குமிடையே நிகழ்ந்த புதிய கைகலப்புகளில் முப்பத்தெட்டு இந்திய துருப்புக்கள் மாண்டதாகவும். நாற்பத்தொரு பேர் காயமடைந்ததாகவும் ''காஷ்மீர் குரல்'' வானொலி அறிவித்துள்ளது.

''மண்டியில் நிகழ்ந்த கைகலப்புகளில் 20 இந்தியதுருப்புக்கள் மாண்டனர். 15 பேர் காயமடைந்தனர். ரஜுரி பகுதியில் நிகழ்ந்த கைகலப்பில் 18 இந்திய துருப்புக்கள் மாண்டனர், 26 பேர்காயமடைந்தனர்.'' என்று ''காஷ்மீர் குரல்'' வானொலி அறிவித்துள்ளது.

சம் பகுதியில் பலமான சண்டை நிகழ்ந்ததென்றும் உயிர்ச் சேதமும் இங்குஅதிகமென்றும் அந்த வானொலி நேற்றிரவு அறிவித்தது.

## விமான விபத்தில் 58 பேர் பலி

ஹாங்காங், ஆக. 25

58 இராணுவ வீரர்களை ஏற்றிக்கொண்டு சென்ற ஒரு விமானம் ஹாங்காங் கடலில் விபத்துக்குள்ளாகியதால் அவர்கள் மாண்டனர்.

## பொருளாதார வகுப்பு

பெர்லின், ஆக. 25

பெர்லின் பொருளாதாரக் கல்லூரியில் 4 வாரங்களாக நடைபெற்ற சர்வதேசப் பொருளாதார வகுப்பில் 16 ஆசிய, ஆபிரிக்க, தென் அமெரிக்க நாடுகளைச் சேர்ந்த பொருளாதார நிபுணர்கள் 32 பேர் கலந்துகொண்டனர். சோஷலிஸ தேசியப் பொருளாதாரம் பற்றி வகுப்பில் விரிவுரைகள் நிகழ்த்தப்பட்டன.

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் தொழிற்சாலைகள் நடத்தப்படும் முறை, கூட்டுறவுமுறையின் விசேட அம்சங்கள், திட்டமிடுதல், நிதி மூலதனம் பிரயோசனம் முதலியவை பற்றியும் அவர்களுக்கு விளக்கிக் கூறப்பட்டது, பொருளாதார வளர்ச்சி குன்றிய நாடுகளுக்கு அவற்றின் தேசியப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக பெர்லின் பொருளாதாரக் கல்லூரி எல்லா உதவிகளையும் செய்யும் என்று பொருளாதார வகுப்புக்குத் தலைமை தாங்கிய பேராசிரியர் [illegible] கூறினர்.

## "இரத்தக்களரியை உடன் நிறுத்துக காஷ்மீர் இந்தியாவின் பகுதியே"

### "பிராவ்டா" கருத்து

மாஸ்கோ, ஆக. 25

''ஜம்மு காஷ்மீர் இந்தியாவின் ஒருபகுதியே. இப்பொழுது இங்கு இரத்தக்களரி ஏற்பட்டு வருவதைக் கண்டு ரஷ்யாவுக்கு பெரும் கவலை ஏற்பட்டிருக்கிறது'' என்று சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிப் பத்திரிகையான ''பிராவ்டா'' தெரிவித்துள்ளது.

''ஜம்மு காஷ்மீரில் நெருக்கடி ஏற்பட்டிருப்பது அங்கு நிலவிய அமைதிக்கு ஒரு சவாலாகும். பூசல்கள் உடனடியாக நிறுத்தப்பட்டு அமைதி மீண்டும் அங்கு தோன்றவேண்டும். காஷ்மீரில் நிகழ்ந்து வரும் சம்பவங்கள் ரஷ்யாவுக்கு பெரும் கவலையை அளித்திருக்கிறது'' என்றும் ''பிராவ்டா''. கருத்து வெளியிட்டுள்ளது

## சியோலில் 10,000பேர் ஆர்ப்பாட்டம்

சியோல், ஆக. 25

தென்கொரிய அரசாங்கத்துக்கு எதிராக நேற்று நடைபெற்ற பிரமாண்டமான ஆர்ப்பாட்டங்களில் 85 ஆர்ப்பாட்டக்காரர்களும் 91 பொலிஸ் வீரர்களும் காயமடைந்தனர் என்றும் ஐந்நூறுக்குமதிகமானவர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கைதானவர்களில் அதிகமானவர்கள் மாணவர்கள்.

தென்கொரிய அரசாங்கத்துக்கும் ஜப்பானுக்குமிடையே ஏற்பட்டுள்ள உறவுகளை எதிர்த்தே நேற்று இந்த ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

இந்த ஆர்ப்பாட்டங்களில் பத்தாயிரத்துக்குமதிகமானவர்கள் கலந்துகொண்டதாக கடைசியாகக் கிடைத்த செய்திகள் கூறுகின்றன.

மாணவர்கள்ஒருபொலிஸ் சார்ஜண்டை பலவந்தமாகக் கடத்திச் சென்றுவிட்டனர். மாணவர்களை விடுதலை செய்தால் சார்ஜண்டை விடுவிப்பதாக அவர்கள் கோரியுள்ளனர்.

## விண்வெளியாத்திரையில் நான்கு நாட்களை கழித்தது

### "ஜெமினி-5'ன் சாதனை

வாஷிங்டன், ஆக 25

விண்வெளியில் பூமியை வலம்வந்துகொண்டிருக்கும் அமெரிக்காவின் 'ஜெமினி-5' வானவெளிக்கப்பல் தனது எட்டுநாள் யாத்திரையின் அரைவாசி தூரத்தை முடித்துவிட்டது. 'ஜெமினி-5' வானவெளிக்கப்பல் இப்பொழுது திட்டமிட்டபடி சென்றுகொண்டிருப்பதாகவும் எட்டுநாட்கள்வரை அது விண்வெளியில் இருக்குமென்றும் பூமியிலுள்ள கட்டுப்பாட்டு நிலைய அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இந்த வானவெளிக் கப்பல் நேற்று கலிபோர்ணியா மீது பறந்து சென்றுகொண்டிருக்கையில், கலிபோர்ணியா தளத்திலிருந்து செலுத்தப்பட்ட ஏவு கருவியொன்றை விண்வெளிவீரர்கள் படம் பிடித்தனர்.

இரு விண்வெளிவீரர்களும் நன்ருக நித்திரை செய்து ஓய்வெடுத்துக் கொண்டனர் என்றும் அவர்களின் உடல் நிலை திருப்திகரமாக இருக்கிறதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஜெர்மனிக்கு அணுகுண்டு வேண்டாம்

பெர்லின், ஆக. 25

செப்டம்பரில் நடைபெறவிருக்கும் மேற்கு ஜெர்மன் பொதுத் தேர்தலில் படைக்குறைப்பையும், ஜெர்மனியில் சமாதானத்தையும், இரு ஜெர்மன் ராஜ்யங்களிடையே உடன்பாட்டையும் ஆதரிக்கும் ஓர் அரசாங்கம் தேர்ந்தெடுக்கப்படுமானுல் அதனுல் இரு ஜெர்மன் ராஜ்யங்களின் மக்களுக்கும் நன்மை ஏற்படும்'' என்று ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் ஜனுதிபதி உல்பிரிச் ஒரு டெலிவிஷன் பேட்டியில் கூறினுர்.

மேற்கு ஜெர்மனி அணு ஆயுதங்களைப் பெறுவதற்காகச் செய்யும் முயற்சியைப் பற்றி குறிப்பிட்ட ஜனுதிபதி ''ஐரோப்பாவின் இதயத்தில் அணுகுண்டுடன் விளையாடுவது பைத்தியக்காரனின் செயல்'' என்று கூறினுர்.

அணு ஆயுதங்களைத் தடைசெய்வதற்காகக் கூட்டு நடவடிக்கை எடுப்பது பற்றிமேற்கு ஜெர்மன் ஜனு. எர்ஹாட்டுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தான் தயாராயிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## கோபாலன்

திருவனந்தபுரம், ஆக, 25

உண்ணுவிரதமிருந்துவரும் இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. ஏ, கே. கோபாலனின் உடல்நிலை மோசமானதைத் தொடர்ந்து அவர் இப்பொழுது திருச்சூரிலிருந்து திருவனந்தபுரத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளார். கடந்த சனிக்கிழமையிலிருந்து அவர் உண்ணுவிரதமிருந்து வருகிருர்.

அவரின் உடல்நிலை கவலைக்கிடமில்லை என்றும் ஆனுல் மிகவும் தளர்ச்சி அடைந்திருப்பதாகவும் வைத்தியஅறிக்கையொன்று கூறுகிறது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போலியோ மருந்து விநியோகம்

பளை, புதன்

நாடெங்கும் பரவிவரும் போலியோ நோயைத் தடுக்குமுகமாக சிரமதான முறைமூலம் இம்மாதம் 29ந் திகதியும் 30-ந் திகதியும் பளைப்பகுதிக்கு போலியோ தடைமருந்து விநியோகம் செய்யப்படவிருக்கிறது. இச்சிரமதான இயக்கத்தில் சாவகச்சேரி வைத்திய அதிகாரியும் ஆறு சுகாதார பரிசோதகர்கள் உட்பட சுமார் 20பேர் கடமையாற்றுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இச்சிரமதான இயக்கக்குழுவினர் பளை சுகாதார பரிசோதகரது ஆதரவில் பச்சிலைப்பள்ளிக்காரியாதிகாரி திரு. வ. கந்தப்பிள்ளை தலைமையில் எட்டு வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு வீடுவீடாகச் சென்று போலியோ தடைமருந்து விநியோகஞ் செய்வார்கள். அகில இலங்கையில் சிரமதான முறையை உபயோகித்து பொலியோ தடைமருந்து விநியோகம் செய்வது இதுவே முதல்தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

## தொழிலாளர் பிரச்னைகள்

உடுப்பிட்டி, புதன்

இப்பகுதி நகரசுத்தித் தொழிலாளர்கள் ஐக்கியமான ஓர் அமைப்புக்குக் கீழ் இணைந்து தங்கள் பொதுப் பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதில் முயல்வதைக் காணும் போது மகிழ்ச்சியடைகிறேன். இதுவரையில் நகரசுத்தித் தொழிலாளர்களின் பிரச்னைகளை யிட்டுத் தீர்வுகாண அரசாங்கம் முன்வராததையிட்டு மிகவும் வருத்தப்படவேண்டியிருக்கிறது. பருத்தித்துறை நகரசுத்தித் தொழிலாளர்கள் வாழும் இடம் உண்மையிலேயே இப்பகுதி மக்களின் மாட்டுக் கொட்டில்களை விடக் கேவலமானவை''.

இவ்வாறு வடமராட்சி நகரசுத்தித் தொழிலாளர் இளைஞர் முன்னேற்றக் கழகக் கூட்டத்திற்கு சமுகமளித்த சமூக சேவையாளர் திரு. கே. ரி. இராசசிங்கம் பேசுகையில் கூறினர்.

திரு. வே. நாகன் தலைமை வகித்தார்.

வடமராட்சிப் பகுதி நகரசுத்தித் தொழிலாளர்களின் பிரச்னைகள், குடியிருப்பு வசதிகள் பற்றிய மகஜரொன்றை ஸ்தலஸ்தாபன அமைச்சர் திரு. எம். திருச்செல்வத்திற்கு அனுப்பி வைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

சங்கச் செயலாளர் திரு. என். கோவிந்தன் நன்றி கூறினர்.

## டிசம்பரில் தேர்தல்

மொரட்டுவா, புதன்

மொரட்டுவா நகரசபையின் பன்னிரண்டு வட்டாரங்களுக்கான தேர்தல் அநேகமாக டிசம்பர் மாதத்தில் நடைபெறலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது நகரசபையில் எட்டு ஐக்கியதேசியக் கட்சி அங்கத்தவர்களும், இரண்டு சுயேச்சை அங்கத்தவர்களும், ஒரு லங்கா சமசமாஜக்கட்சி அங்கத்தவரும் பிரதிநிதித்துவம் வகிக்கின்றனர். லங்கா சமசமாஜக்கட்சியும், ஐக்கியதேசியக்கட்சியும் எல்லா வட்டாரங்களுக்கும் போட்டியிட முடிவு செய்துள்ளதாகத் தெரியவருகிறது.

## ஆண்டு விழா

யாழ்ப்பாணம், வியா.

மாவிப்பாய் இந்துசமய விருத்திச் சங்கத்தின் ஆண்டு விழா வருகிற சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் வேலக்கை பிள்ளையார் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

முதல் நாள் விழாவில் சமயாசாரிய மூர்த்திகள் பிரதிஷ்டையும், ஞாயிற்றுக்கிழமை சொற்பொழிவுகளும், விசேஷ நிகழ்ச்சிகளாக திரு. சி. எஸ். மணி பாகவதர் 'தொண்டர்தம் பெருமை சொல்லவும் அரிதே' என்னும் பொருள் பற்றிய கதாப்பிரசங்கமும் நடைபெறும்.

## பொலிஸ் பாதுகாப்பு

நுவரெலியா, புதன்

நுவரெலியாவில் திருமதி ஸ்ரீமா கலந்துகொண்ட ஒரு கூட்டத்துக்குப் பொலிஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டது.

தேசிய அரசாங்கத்தின் தலைவர்களை தனிப்பட்ட முறையில் பேச்சாளர்கள் தாக்க முற்பட்டபோது, கூட்டத்திற்குச் சமூகமளித்திருந்த ஒரு சாரார் கூட்டத்தைக் குழப்ப முற்பட்டதைத்தொடர்ந்தே பொலிஸ் பாதுகாப்புக் கொடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

கூட்ட முடிவில் திருமதி பண்டாரநாயக்கா பொலிஸ் பாதுகாப்புடனேயே சென்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிராமசேவையாளருக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், வியா.

ஒரு வாரத்துக்கு முன்னர், ஒரு வீட்டிலிருந்து களவாடப்பட்ட ஆயிரம் ரூபா பணத்தைக் கண்டுபிடித்து, களவாடிய நபரையும் சந்தேகத்தின்மீது பொலிஸாரிடம் ஒப்படைத்த ஒரு கிராமசேவையாளரை அரசாங்க அதிபர் பாராட்டியுள்ளார்.

வட்டுக்கோட்டை மேற்கைச்சேர்ந்த திருமதி வரதராசா என்பவர் வீட்டில் ஆயிரம் ரூபா பணம் களவுபோனது குறித்து விசாரணைகள் நடத்திவிட்டு மேற்கு கிராமசேவையாளர் திரு. வி. பிரான்சிஸ் அந்த வீட்டில் வேலைபார்த்த நாகநாதன் நாகம்மா என்ற சிறுமியிடமிருந்து ஆயிரம் ரூபா பணத்தையும் கைப்பற்றி சந்தேகநபரையும் சங்கானை பொலிஸாரிடம் ஒப்படைத்தார். மல்லாகம் நீதிபதி முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு சந்தேகநபரை நீதிபதி இருவருட நன்னடத்தைப்பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டார்.

## "கிழக்கிலும் மரவரி முறை வேண்டும்"

திருகோணமலை, புதன்

வடமாகாணத்தைப் போலவே கிழக்கு மாகாணத்திலும் மரவரிமுறையை அமுல்நடத்துமாறு சீவல் தொழிலாளர் சங்கம் தீர்மானித்ததைத் தாம் ஆதரிப்பதாக இலங்கை தமிழர் முன்னேற்ற மகாசபை அறிக்கை விட்டிருக்கிறது.

''வடமாகாண சீவல் தொழிலாளர்கள்தான் கிழக்கு மாகாணத்தில் தொழில் புரிகிறார்கள். கிழக்கு மாகாணத் தொழிலாளர்கள் படும் கஷ்டங்களை நிவர்த்தி செய்யாது வடமாகாணத்தை மட்டும் திருத்தியமைக்க முயற்சி செய்வது ஒருதலைப்பட்சமான செயலாகும். மரவரி முறையினால் தொழிலாளர்களுக்கு மட்டுமல்லாமல் பொதுமக்களும் நன்மையடைய முடியும். இதற்கு வடமாகாணம் நல்லதொரு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. கிழக்கு மாகாணத்திலும் மரவரி முறையை அமுல் நடத்தும் நல்ல முடிவுக்குப் பாராளுமன்றஉறுப்பினர்கள் ஆதரவளிக்க வேண்டும்'' என அவ்வறிக்கை கூறுகிறது.

## ஆறுதல்

அக்கரைப்பற்று, புதன்

கடந்த பல காலமாக மழையில்லாமல் அவதியுற்றுக் கொண்டிருந்த அக்கரைப்பற்றுப்பகுதி மக்களுக்கும், கால் நடைகளுக்கும் அங்கு பெய்த மழை ஆறுதல் அளித்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

## "மக்கள் கடமைகளை" உணரவேண்டும்

யாழ்ப்பாணம், புதன்

''மன்ன ராட்சிக்காலத்தில் அரசன் சமுதாயத்தின் ஒவ்வொரு துறையினருக்கும் கடமை வகுத்தான். வகுத்த கடமைகளை வழுவாது செய்யச் செங்கோலோச்சினான். ஆனால் மக்களாட்சி மலர்ந்துள்ள இன்றோ, மக்கள் தாமாகவே நாட்டுக்குரிய கடமைகளைஉணர்ந்தும்போற்றவேண்டும். மக்கள் தம் கடமைகளை மறந்து உரிமைகளைப் பெறுவதில் மாத்திரமே கண்ணுங்கருத்துமாயிருத்தலாகாது. கடமைகளைச் செய்பவனே உரிமைகளைக் கேட்பதற்குத் தகுதியானவன்'' என ஆசிரியர் மு.சிவானந்தம் மாதகல் சனசமூக நிலையத்தினதும், இளைஞர் கழகத்தினதும் ஆண்டுவிழாவிற் பேசும் போது குறிப்பிடடார்.

அவர் தொடர்ந்து பேசுகையிற் குறிப்பிட்டதாவது: உடம்பை வளர்க்க உணவு தேடுவது மாத்திரம் தான் எமது கடமை அல்ல. பண்பைவளர்த்து, சமூகத்திலே பிறரோடு ஒன்றி வாழ்வது நமது கடமையாகும். எடுத்ததற்கெல்லாம் போராடிக் காலம்கழியாது, அறம் வழுவாது, நீதிதவறாது, விட்டுக்கொடுத்து வாழவும் பழகவேண்டும். இல்லாவிடில் நாடு காடாகிவிடும்; மக்கள் மாக்களாகி விடுவர். சமுதாயம் சிறப்புற்றிருக்கத் தனிமனிதன் ஒவ்வொருவரும் கைக்கொள்ள வேண்டிய விதிமுறைகளையும், வாழ்க்கைவழி முறைகளையும் வகுத்துத்தந்தவர் வள்ளுவர். உலகப்பெரியார்கள் பலரது வாழ்க்கைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, அவர்களது வாழ்க்கை முறையில் வள்ளுவர் இலக்கணமிருப்பதைக் காணலாம்.''

திரு ப. கந்தஞானி தலைமைவகித்தார். திருவாளர்கள் வீர.சுப்பிரமணியம், வி. யோசேப் முதலியோரும் பேசினார்கள். செயலாளர் நன்றி கூறினார்.

## தீர்மானங்கள்

ஊர்காவற்றுறை, புதன்

கடந்தபல மாதங்களாக நெடுந்தீவில் பச்சையரிசி தொடர்ந்து வழங்கப்பட்டு வருவதாயும், இதன் காரணமாக சிலர் நோய்வாய் படுகிறார்கள் எனவும், பச்சையரிசி விநியோகத்தை மாற்றி நாட்டரிசி வழங்கவேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் நெடுந்தீவுகிராமசபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணம், வியா

சுன்னாகம் பட்டினசபை வரியிறுப்போர் சங்கத்தின் கூட்டம் திரு த. சிவலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

1965-ம் ஆண்டு ஆதன வரியை ஆறுவீதம் குறைக்கும்படி பட்டினசபைத் தலைவரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

அத்துடன் சுன்னாகம்—கந்தரோடை றோட்டுக்கு அருகாமையிலுள்ள வடிகாலைத் தினமும் துப்பரவாக்கி நீர் நிலையாக நிற்காது செய்ய நடவடிக்கை எடுக்கும்படியும் கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

மாத்தறை; புதன்

நாககுலுகமுவைச் சேர்ந்த மாவல்ல என்ற இடத்தில் ஏற்பட்ட கலவரம் ஒன்றில் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றதில் இரு வயோதிபப் பெண்களும், ஒரு வயோதிபரும் கடுமையான காயங்களுடன் மாத்தறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இக்கலவரத்தையொட்டி தங்காலைப் பொலிஸார் ஒருவரைக் கைதுசெய்துள்ளனர்.


REGAL--JAFFNA
NOW SHOWING!
Pat Boone
in
NEVER PUT IT
IN WRITING



வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் பஞ்சரத
திருப்பணி நிதி



ஒவ்வோர் சைவ நன்மக்களாலும் வளர்ந்து புதிய ரதங்களை விரைவில் உருவாக்க அடியார்கள் நன்கொடை எதிர்பார்க்கப்படுகிறது.

பணம் அனுப்பும் விலாசம்:-
தருமகர்த்தா, திருப்பணிச்சபை,
தேவஸ்தான காரியாலயம்,
வண்ணை. வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.



இப்பொழுது திரையிடப்படுகிறது!
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி பிற்பகல் 2-30, 6-30, 10-30
சனி ஞாயிறு 4 காட்சிகள்
சிவாஜி கணேசன், சாவித்திரி
எஸ். எஸ் ராஜேந்திரன்
கே. ஆர். விஜயா
நடிக்கும்
கைகொடுத்த
தெய்வம்

ராஜா (யாழ்ப்பாணம்)
ஆறறிவு படைத்த மனிதன் தன்னினத்தைச் சார்ந்தவனையே மிருகமாக்கத் துணியும் போது எழும் உரிமைக் குரல்தான்—''நானும் மனிதன்தான்''
விஜயபுரி வீரன் புகழ் ஆனந்தன்-சந்திரகாந்தா
பாண்டி செல்வராஜ், ஷீலாதேவி, அசோகன், நாகேஷ்
கண்ணன், ஓ. ஏ. கே. தேவர் நடிக்கும்
ஆனந்த மூவிஸ்
நானும் ஒரு மனிதன்தான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### அறிவித்தல்

அச்சுவேலி சென். சூசையப்பர் திருப்பணி விவேகப் போட்டி 26-9-65 க்குப் பின் போடப்பட்டிருக்கிறது. அன்று அச்சுவேலி சென். திறேசா பாடசாலையில் பிற்பகல் 4-00 மணிக்கு சமுகம் கொடுக்கவும். 818

### விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டிலே

இடைக்காடு புவனேஸ்வரி அம்மன் கோவிலின் பரம்பரை றிறஸ்ரியும் (தர்மகர்த்தா) மனேஜரும் (எஜமானர்) ஆகிய வளலாய் ஞானர்சுப்பிரமணியம்—

வழக்காளி

வழக்கு இல. ரீ. ஆர். 69.

1. வளலாய் பொன்னம்பலம் அரியராசா.

2. வளலாய் சுவாமிநாதர் இராமசாமி.

3. தம்பாலை நாகமுத்து கணபதிப்பிள்ளை.

4. தம்பாலை மாப்பாணர் வேலுப்பிள்ளை கந்தசாமி.

5. பத்தமேனி வல்லிபுரம் செல்லையா.

6. தம்பாலை ஆறுமுகம் வேலுப்பிள்ளை.

7. மனைவி பொன்னம்மா-

எதிராளிகள்.

பின்னும் சொல்லப்படும் ஆதனங்களை இடைக்காடு புவனேஸ்வரியம்மன் கோவிலுக்குரிய ஆதனங்களென மேற்படி கோர்ட்டிலிருந்து ஒரு ''வெஸ்ரிங் ஓடர்'' Vesting rder) பெறுவதற்காக இவ்வழக்குத் தொடரப் பெற்றுள்ளது.

1965-ம் ஆண்டு ஆவணி மீ 27-ம் திகதிமுற்பகல் 10 மணிக்கு மேற்படி இலக்க வழக்கு மேற்படி கோர்ட்டிலே கூப்பிடப்படும்.

ஆதனங்கள்: (1) தம்பாலை இறை நல்லிகப்பன் வயல் நெ.பர. 13. (2) ஷெ உட்குள வயல் நெ. ப. 5. (3) ஷெ உட்குள வயல் நெ. ப. 4. (4) ஷெ ஈச்சந்தரவை நெ. ப. 2. (5) ஷெ நல்லிகப்பன் வயல் நெ. ப. 1. (6) ஷெ நல்லிகப்பன் வயல் நெ. ப. 3. (7) ஷெ நல்லிகப்பன் வயல் நெ. ப. 2. (8) ஷெ கப்பம் புலம் தலைமடை நி. ப. 55. (9) ஷெ வில்வளைவயல் நெ. ப. 6. (10) ஷெ கல்வயல் நெ. ப. 30. (11) ஷெ வில்வளை வயல் நெ. ப. 4 இதில் அரைவாசி. (12) ஷெ கப்பன் வயலும் கப்பன்புலமும் நெ.ப. 12 3/4 இதில் நி.ப. 1 1/2 தீர்த்தக் கிணறு முழுவதும். (13) ஷெ கப்பன் புலம் தலைமடை நி. ப. 50.

கோர்ட்டுக் கட்டளைப்படி.
மு. முத்துக்குமாரசாமி,
பிரதம லிகிதர்,

819 24-8-65.


## பாடசாலை திருத்தப்படவில்லை

ஊர்காவற்றுறை, புதன்

சூறாவளிக் காற்றினால்தாக்கப்பட்டுத் தரை மட்டமான சரவணை சின்னமடு பாடசாலை இன்னும் திருத்தம் செய்யப்படாமல் இருக்கிறது. வகுப்புகள் சின்னமடு ஆலயத்தில் நடத்தப்பட்டுவருகிறது. மேற்படி பாடசாலை திருத்தம் செய்யப்படாமல் இருப்பது பற்றி சிறுபான்மைத் தமிழ் மக்கள் கவலையடைந்துள்ளனர்.

அண்மையில் கூட்டப்பட்ட சரவணை கி. மு. சங்கக் கூட்டத்தில் சரவணை சின்னமடு பாடசாலை திருத்தம் செய்யப்படாமல் இருப்பதன் காரணம் பற்றி கல்வி அதிகாரியைக் கேட்பது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# "குழந்தைச் செல்வத்தைப்பற்றி கம்பன் ஏன் பாடவில்லை?"

## பேராசிரியர் ஞானசம்பந்தன் தரும் விளக்கம்

யாழ்ப்பாணம், வியாழன்

''தமிழ் இலக்கியத்தில் கம்பரைத் தவிர, குழந்தைச் செல்வத்தைப் பற்றிப் பாடாத புலவர்களே கிடையாது. பத்தாயிரம் பாட்டுகளைத் தமது கம்பராமாயணத்தின் மூலம் உலகுக்கு அளித்த கம்பர், ஒரு பாட்டிலாவது குழந்தையைப் பற்றிப் பாடாத காரணம், அவன் தனது பிள்ளையான அம்பிகாபதி மூலம் பெற்ற வெறுப்பைத் தவிர வேறொரு காரணமுமில்லை. அம்பிகாபதி மூலம் அவன் பெற்ற கசப்பான அனுபவங்கள் குழந்தைச் செல்வத்தின்மீது அளவற்ற, நீக்கமுடியாத கசப்பை உண்டாக்கிவிட்டது.''

யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சொற்பொழிவின்போது சென்னை அரசாங்க தமிழ் வெளியீட்டுத்துறைத் தலைவரான பேராசிரியர் திரு. அ. ச. ஞானசம்பந்தன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''பகைவர்கள்கூட, குழந்தைச் செல்வத்தை விரும்புகிறார்கள். கொலைகாரர்களையும் நல்லவர்களாக்கிவிடக்கூடியது குழந்தைச் செல்வம். குழந்தைகளுடன் கொஞ்சிக் குலாவி விளையாடும்போது ஒருவனுடைய மனம் தூய்மையாகிவிடுகின்றது. குழந்தைமனம் அவன் உள்ளத்தில் தொற்றிக் கொண்டுவிடுகிறது. எல்லாருக்கும் குழந்தையென்றால் விருப்பம் வருவதுபோல, முருகனும் 'குழந்தை' என்றால் எல்லாரும் அவன்பால் மனதைக் கொடுப்பார்கள் என்ற எண்ணத்துடன், அறிஞர்கள் முருகனைக் 'குழந்தை' ஆக்கினார்கள். கொலைகாரர்களை, கெட்டவர்களை குழந்தைகள் எப்படி நல்லவர்களாக்கிவிடுகிறார்களோ அதேபோலவே முருகன் 'குழந்தை'யாக்கப்பட்டால்அவன்பால் மனதைப் பறிகொடுத்துவிடுவார்கள் என்று நம்பினார்கள் பெரியார்கள். அது பெரும் வெற்றியையே அழித்துவிட்டது. மேல்நாட்டு இலக்கியம் என்றாலும்சரி, தமிழ் இலக்கியமானாலும்சரி குழந்தைச் செல்வத்தைப் பற்றி எழுதாத இலக்கியங்களே கிடையாது.

பிழைப்பதற்காக, மற்றவர்கள் நடிக்கக்கூடியவிதத்தில் நாடகங்களை எழுதிய ஷேக்ஸ்பியர்கூட ஒரு நாடகத்தைத் தமது ஆத்மதிருப்திக்காக, குழந்தைகளைக் கதாபாத்திரமாக்கிச் சிருஷ்டித்துள்ளார். 'றிச்செட்' என்ற அந்த நாடகத்தில் பதினொரு வயதுக் குழந்தை ஒன்றையும். ஒன்பது வயதுக் குழந்தை ஒன்றையும் கதா பாத்திரங்களாக்கியுள்ளார் அவர். குழந்தைகள் மீது அவருக்குள்ள விருப்பத்தை இந்நாடகம் தெட்டத் தெளிவாகக் காட்டுகிறதல்லவா!

சேக்கிழார் தமது சிருஷ்டியில் குழந்தைகளைப் பாடுவதற்கு வசதியற்றும் திருஞானசம்பந்தரை குழந்தையாக்கிப் பாடியுள்ளார். இதே போன்றே தமிழ் இலக்கியங்கள் அத்தனையும் குழந்தைச் செல்வத்தைப் பற்றிப் பத்திபத்தியாக எழுதியுள்ளன.

கம்பன் மட்டும் குழந்தையைப் பற்றிப் பாடாததற்குக் காரணம், அவன் வாழ்விலே ஏற்பட்ட மாபெரும் குழப்பத்தைத் தவிர வேறு ஒன்றுமில்லை. ஒருவனுடைய வாழ்க்கையிலே தனது குழந்தையால் ஏதாவதொரு கசப்பான அனுபவத்தைப் பெற்றுக் கொள்வானானால், அவன் காணும் குழந்தைகள் அத்தனையும் பேயாகவும், பிசாசாகவுமே தோற்றப்படுவார்கள். இது கம்பரின் அனுபவ ரீதியான உண்மை.

யார் யார் எப்படியெப்படி எல்லாம் முருகனை விரும்புகிறார்களோ அப்படியான உருவத்துடன் முருகன் அவர்களுக்குத் தோற்றமளிப்பான். ஒருவனுடைய மனோநிலையில் தான் ஆண்டவன் உருவமாகிறான்.''

## கிராமப்புற....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஐயப்பாடு கொண்டிருந்தார் குமாரசுவாமி இக்கொள்கையின் தத்துவம் இன்றைய சூழ்நிலைக்கு ஏற்றதாகஅமைந்துள்ளது. மாதந்தோறும் ஜனப்பெருக்கம் கூடிக்கொண்டே செல்கின்றது. இந்த ஜனப்பெருக்கம்பற்றி எல்லோரும் அறிவார்கள். ஆனால் உலகத்தின் பலபகுதிகளையும் அப்பெருக்கம் எவ்வாறு பாதிக்கிறது என்பதை அறியமாட்டார்கள். அடுத்த நூற்றாண்டில் ஜனப்பெருக்கம் உலகத்தில் அதிகரித்தால் மக்கள் வாழ்வதற்காக பலவழிகளை கையாளவேண்டி நேரிடும். இயற்கை மனிதனை உருவாக்குகிறது. மனிதன் கலாச்சாரத்தை உருவாக்குகிறான். கலாச்சாரத்தில் மேம்பட்டவரான கலாயோகி குமாரசுவாமியின்கலைமேம்பாடுடையமனிதனுக்கு இன்று எந்த இடத்தை மக்கள் கொடுக்கப் போகிறார்கள்?. தனது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு மனிதனுக்குஅமைதி விடாமுயற்சி, எண்ணங்கள் மன உறுதி முதலியனவேண்டியிருக்கின்றன.

மனிதன் பெரிய பிரச்னைகளை தீர்ப்பதிலும், சிக்கலான விஷயங்களுக்கு தீர்வு காண்பதிலும் புதிய சூழ்நிலையை காலத்திற்கு ஏற்றவாறு அமைப்பதிலும் திறமை வாய்ந்தவன். இத்துறையில் இலங்கை சிறந்த முறையில் செயலாற்றி மனிதப் பண்பிற்கு ஏற்றமுறையில் செயலாற்றலாம் என நான் எண்ணுகின்றேன்.

இலங்கையின் ஜனப்பெருக்கம் நாளாந்தம் பெருகிக் கொண்டே செல்கிறது. ஆனால் உங்கள் தலைநகரத்தில் இன்னமும் ஜனநெருக்கடி ஏற்படவில்லை. ஆகையால் நீங்கள் கிராமப்புற அபிவிருத்தித் திட்டங்கள் அமைத்து உங்கள் பிரச்னைகளைதீர்த்துக் கொள்ளலாம். இப்படியான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தி மக்கள்மனதில் என்றும் அகலாத பண்பை நிலைநாட்டுவீர்களானால் இதைவிட நீங்கள் கலாயோகி ஆனந்தகுமாரசுவாமியின் ஞாபகார்த்ததிற்கு என்ன கைமாறு செய்ய வேண்டும்?.

இச்சூழ்நிலையில், இலங்கையின் வருங்கால சந்ததியினர் மனித வாழ்வின் நோக்கை அறிந்து ஒழுக்கம்சார்ந்த நெறியையும், ஆன்மீக வளர்ச்சியையும் உணர்ந்து அதை வழர்ப்பார்கள்.

## அடியார்களுக்கு தாகசாந்தி

யாழ்ப்பாணம், வியா

நல்லூர் கந்தசுவாமி கோவில் சப்பரத்திருவிழாவைத் தரிசிக்க வந்த அடியார்களுக்கு ஸ்ரீமுருகன் தண்ணீர்ப் பந்தலில் 'றொட்கோ' ஸ்தாபனத்தார் சோடா இலவசமாக வழங்கி அடியார்களுக்குத் தாகசாந்தி அளித்தனர்.


## வரி விளம்பரம்

### கல்வி

பீ. ஏ; ஜீ. ஏ. கியூ; ஜி. ஸி. ஈ. உயர் சாதாரண தரங்கள் (கலை, விஞ்ஞானம்) சிங்களம், வர்த்தக தமிழ், ஆங்கில வகுப்புகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**யாழ்ப்பாண டியூட்டோறியல் கல்லூரி.** கைலாசபிள்ளையார் கோயிலடி, நல்லூர் - யாழ்ப்பாணம் 906

### வைத்தியம்

**தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி** முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம். 771

### விற்பனைக்கு

பெரியகடை (கொட்டடி) சமீபமாக ஆஸ்பத்திரி றோட்டில் 65-ம் இலக்கமுள்ள வீடும் சுமார் 5 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு. வேண்டுவோர் எம்மோடு தொடர்புகொள்க. வைத்தியர் கே. எஸ். பரிபூரணநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம். 913

A 55 'ஒஸ்ரின் கேம்பிரிச்' சாமான்கள் ஏற்றும் வான் 33 ஸ்ரீ ஐயாயிரத்து தொடர் பிலக்கம். 'ஒரிஜினல் பிஸ்டன்' நான்கு டயர்களும் பற்றறியும் புதியது. எதுவித பழுதும் கிடையாது. ச. சுப்பிரமணியம், உடுவில் கிழக்கு, சுன்னாகம். 929


## தொழிலாளர் சங்க தீர்மானம்

யாழ்ப்பாணம், புதன்

காங்கேசன் சீமெந்து ஐக்கிய தொழிலாளர் யூனியனின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. சேமலாப நிதிக்கு இப்பொழுது முதலாளிகள் 6 சதவிகிதமே பணம் செலுத்துகிறார்கள் என்றும் அவர்கள் 10 சதவிகிதம் கொடுக்க வகைசெய்யக்கூடியதாக சேமலாபநிதிச் சட்டத்தை திருத்தவெண்டுமெனக் கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. வேறு சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. இ. வயிரமுத்து, உபதலைவர்: எஸ். கணபதிப்பிள்ளை, உதவிக் காரியதரிசி: எஸ். ராசா, பொருளாளர்: எம். தம்பையா.

## நியமனம்

பம்பலப்பிட்டி, புதன்

கொழும்பு சுகாதாரப்பகுதியில் பிரதம வைத்திய அதிகாரியாக டாக்டர் ஜி. ஏ. ஆர். பெரேரா நியமனம் பெற்றுள்ளார். கொழும்பு சட்டவைத்தியஅதிகாரியாக விருந்த டாக்டர் நடராசா சிங்கப்பூருக்குச் சென்றதைத்தொடர்ந்தே டாக்டர் பெரேரா இதுவரை காலமும் பதில் சட்டவைத்திய அதிகாரியாக கடமையாற்றியுள்ளார்.




## கொழும்பு

### வியாழன் 26 - 8 - 65

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00).

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவ நற்சிந்தனை, 6-55இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்,

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்பஇசை.

மாலை 4-15 பிறந்ததின வாழ்த்துக்கள், 4-30 நல்லூர் கந்தன் தீர்த்தோற்சவ அஞ்சல்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 இசை வகுப்பு, 7-00 பேச்சு 'எங்கள்உணவு, —வி. கே. நல்லையா, 7-15 வயலின், 7-45 நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30நேயர் விருப்பம், 10-00 பாட்டு.

## மந்திரி சுகததாசா திருமலை விஜயம்

திருக்கோணமலை, புதன்

தேசிய சேவைகள் அமைச்சர் திரு.வி.ஏ. சுகததாசா அடுத்த மாதம் 5-ம் திகதி திருக்கோணமலைக்கு விஜயம் செய்ய இருக்கிறார் திருக்கோணமலை பாராளுமன்றப் பிரதிநிதி திரு. சு. ம. மாணிக்கராசாவின் அழைப்பின் பேரில் மந்திரி திருமலைக்கு விஜயஞ் செய்வார்.

திருக்கோணமலைக்கு விஜயஞ் செய்ய இருக்கும் மந்திரிக்கு பல தொழிற்சங்கங்களும் அரசியற் கட்சிகளும் ஏற்பாடுகள் செய்துள்ளன. திருக்கோணமலை வரவிருக்கும் மந்திரி, திருமலை விஜயத்தின்போது துறைமுகம், இலங்கை போக்குவரத்துச்சபை திருக்கோணமலை பஸ் டிப்போ முதலியவற்றையும் பார்வையிட இருக்கின்றார். திருக்கோணமலை தமிழரசுக் கட்சிக் கிளை, ஐக்கியதேசியக் கட்சிக்கிளை முதலியன விருந்துபசாரம் நடத்தி மந்திரி திரு. வி. ஏ. சுகததாஸாவை கௌரவிக்க எண்ணியிருப்பதாகவும் தெரியவருகிறது.

மந்திரியின் திருமலை விஜயத்தின் பொழுது திருமலை எம். பி. திரு. சு. ம. மாணிக்கராசா திருமலையின் பஸ் சேவையில ஏற்படும் இடையூறுகள், சீர்கேடுகள் துறைமுகத்தை சீர்திருத்தி அமைத்தல் முதலியனபற்றி முறையிடுவார் என்று அறியப்படுகிறது.

## காசநோய்க்கு புது மருந்து

பெர்லின், ஆக. 25

சயரோகக் கிருமிகளை நாசமாக்கும் ''ஏயித்தின்'' என்னும் மருந்தை தயாரிப்பதற்காக முன்னேற்றமான முறைகளைக் கையாளுவது பற்றி ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் செய்யப்பட்ட பரிசோதனைகள் வெற்றியடைந்துள்ளன. சயரோகத்தைச் சுகப்படுத்தும் இப்புதிய மருந்தை பெருமளவில் உற்பத்தி செய்வதற்கான இயந்திரங்கள் இங்கு லெயூகு என்னுமிடத்திலுள்ள ரசாயன தொழிற்சாலையில் அமைக்கப்படுகிறது. 30,000 சிப்பந்திகள் பணியாற்றும் இந்த ரசாயன தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் 400 வகை மருந்துகள் 50 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாணவர்களுக்கு 3 மணி நேர வயல்வேலை

## பாடத்திட்டத்தில் ஒரு அம்சமாக சேர்க்கப்படும்

கொழும்பு, செவ்வாய்

அடுத்த வருடத்திலிருந்து பாடசாலை மாணவர்கள் ஒரு தவணையில் ஐந்து தினங்களுக்கு தினமும் மூன்று மணி நேரம் நெல்வயலில் வேலைசெய்யவேண்டியிருக்கும். விவசாயத் துறையில் இளைஞரை ஊக்குவிக்கும் அரசாங்கத்தின் திட்டத்தின் ஒரு பகுதி இது.

நாட்டில் விவசாயத்தை விருத்திசெய்யும் நோக்கத்துடனேயே அரசாங்கம் இத்திட்டத்தை வகுத்துள்ளது. இத்திட்டம் பாடத்திட்டத்தில் சேர்க்கப்படவிருக்கிறது. ஆசிரியர்களின் மேற்பார்வையின் கீழ் மத்திய வகுப்பு மாணவர்கள் பாடசாலை நேரத்தில் வயல்களில் வேலை செய்வார்கள் என அறியப்படுகிறது.

## "சமூக ஒற்றுமையை தேசீய அரசாங்கம் வலியுறுத்துகிறது"

—சிவசிதம்பரம் எம். பி.

கொழும்பு, செவ்வாய்

'கடந்த நான்கு வருடகாலமாக முந்திய அரசாங்கம் நீண்ட அவசரகாலச் சட்டத்தை அமுலில் வைத்திருந்து மக்களின் அன்றுட வாழ்க்கைக்கு பெரும் இடையூறு விளைவித்தது. வடக்கில் ராணுவத்தை வைத்து அதன் பராமரிப்புச் செலவுக்கு சுமார் ஒரு கோடியே பத்து லட்சம் ரூபா செலவிட்டது. தேசிய அரசாங்கம் நாட்டின் சபீட்சத்துக்கு சகல சமூக மக்களுக்கிடையிலும் ஒற்றுமை ஏற்படவேண்டிய தன் அவசியத்தையும் பரஸ்பர நல்லெண்ணம் நிலவவேண்டிய தன் அவசியத்தையும் வலியுறுத்தி வருகிறது'.

மேற்கண்டாறு ஜனப் பிரதிநிதிகள் சபையில் வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தின்போது பேசிய உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் கூறினர்,

திரு. சிவசிதம்பரம் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:

முந்திய அரசாங்கம் வகுப்பு வேற்றுமை கண்ணேட்டத்துடனேயே அபிவிருத்தித் திட்டங்களை அமுல் நடத்தியது. குறிப்பிட்ட சில இடங்களில் மட்டுமே அபிவிருத்தித் திட்டங்கள் அமுல் நடத்தப்பட்டன. ஆனல் தேசிய அரசாங்கத்தின் தேசிய மய சேவைகள் மந்திரி காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்யப்போவதாக ஏற்கனவே வாக்குறுதியளித்துள்ளார். இதனல் சிமெந்தின் விலை குறைய வழி பிறப்பதோடு பல வித நன்மைகள் ஏற்படும். சகல சமூகங்களிடையேயும் நல்லெண்ணத்தை நிலவச் செய்ய பிரதமர் எடுத்துள்ள நல்ல முயற்சி நாட்டிலுள்ள சகல மக்களுக்கும் நல் வாழ்வு அளிக்கும்.

### தனியார்துறைக்கு ஆதரவு

உற்பத்தியும் விநியோகமும் முற்றிலும் அரசாங்க கட்டுப்பாட்டின்கீழ் இருக்கும்வரை ஜனநாயகம் நாட்டில் இருக்கமாட்டாது, முந்திய அரசாங்கம் கூட கைத்தொழில் முன்னேற்றத்துக்கு தனியார்துறையில் பெரிதும் நம்பியிருந்தது. முந்திய அரசாங்கம் வெறும் வாயளவில் தனியார் துறைக்கு உதவி புரிவதாக சொல்லி வந்தார்களே தவிர தனியார்துறையை நசுக்கவே அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டார்கள். ஆனல் தற்போதைய நிதி மந்திரி தனியார்துறைக்கு ஊக்கமளிக்கும் வகையில் திட்டமிட்டுள்ளார். தேசிய அரசாங்கம் 67 கோடியே 40 லட்சம் ரூபா முதலீட்டுச் செலவாக ஒதுக்கியுள்ளது.

நிதிமந்திரி பின் வரவு - செலவுத் திட்டத்திலுள்ள இரு முக்கிய அம்சங்களில் ஒன்று வாழ்க்கைச் செலவைக் குறைப்பது, மற்றது முதலீடுகளை அதிகரிக்கச் செய்வது'.

வாழ்க்கைச் செலவைக் குறைப்பது இலகுவான காரியமாக இருந்தால் முந்திய அரசாங்கத்தில் நிதிமந்திரியாகவிருந்த டாக்டர் என்.எம். பெரேராஏன் அப்படிச் செய்யவில்லையென நான் கேட்க விரும்புகின்றேன் என்றும் திரு, சிவசிதம்பரம் குறிப்பிட்டார்.

## திருமணம்

### டாக்டர் ஜயரத்தினம் — யோகாம்பிகை

கரம்பன் சண்முகநாத மகாவித்தியாலய அதிபர் திரு. பொ. இரத்தினம் அவர்களின் புதல்வன் டாக்டர் ஜயரத்தினத்துக்கும் (வைத்திய அதிகாரி. வெளி நோயாளர் பகுதி, மட்டக்களப்பு பெரியாஸ்பத்திரி) ஓய்வு பெற்ற மலாயா பேராக் மராமத்து இலாகா நிதி உதவியாளர் திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்களின் புதல்வி செல்வி யோகாம்பிகைக்கும் 29-8-65 ஞாற்றுக்கிழமை காலை வட்டுக்கோட்டையிலுள்ள மணமகள் இல்லத்தில் திருமணம் நடைபெறும்.

## செனட்டில் மலாய் சமூக பிரதிநிதி

கொழும்பு, செவ்.

மலாய் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் செனட்டராக நியமிக்கப்படுவதுபற்றி அரசாங்கம் ஆலோசனை செய்யும் என பிரதமர் திரு. டட்லி இன்று ஜனப் பிரதிநிதிகள் சபையில் தெரிவித்தார். சமசமாஜக்கட்சி அங்கத்தவர் திரு. பி. பி. விஜயசுந்தராவின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது ஒரு தேசிய அரசாங்கம் என பிரதமர் மேலும் பேசுகையில் எடுத்துக்கூறினர்.

## பொது தராதர பத்திர பரீட்சை

பம்பலப்பிட்டி, புதன்

கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரணதர)ப் பரீட்சை 1965-ம் ஆண்டு ஆகஸ்ட் பரீட்சையிலிருந்து விலகுதற்சீட்டு இனிமேல் வழங்கப்படமாட்டாதென பதில் பரீட்சாதிகாரி அறிவித்துள்ளார். 1964 ஆகஸ்டிலும் 1964 டிசம்பரிலும் தற்பொழுதுள்ள விதிகளின்படி விலகியபரீட்சார்த்திகளுக்கு திருப்பிக்கொடுக்கும் பணத்திற்குப் பதிலாக விலகுதற்சீட்டு வழங்கப்படும்,

1965-ம் ஆண்டு ஆகஸ்ட் பரீட்சையிலிருந்து தற்பொழுது நடைமுறையிலிருக்கும் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர)ப் பரீட்சைக்குரிய பிரமாணத்தில் 13, 14வது பகுதிகள் தற்பொழுது மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் பரீட்சாதிகாரி அறிவித்துள்ளார்.

## கொழும்பு மாநகரசபை நூற்றாண்டு விழா

### ராதாகிருஷ்ணனுக்கு அழைப்பு

கொழும்பு, செவ்வாய்

வருகிறஅக்டோபர்மாதம் 28-ம் திகதி கொழும்பு மாநகர சபையின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டம் ஆரம்பமாகும்.

இதுசம்பந்தமான விசேஷ நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வருமாறு இந்திய ஜனதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணனும், பலஉலகத் தலைநகர்களின் மேயர்களும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

அன்றையதினம் இரவு பூராவும் நகரமண்டபத்தில் பௌத்த பிக்குகள் பிரித் ஓதுவார்கள் 100 பிக்குகளுக்கு தானம் வழங்கப்படும்.

கடந்த காலமேயர்கள், உதவிமேயர்கள் ஆகியோரின் உருவப்படங்களை மந்திரி திருச்செல்வம் திரை நீக்கம் செய்துவைப்பார்.

விசேஷ முத்திரை ஒன்றும் வெளியிடப்படும். மற்றும் பல நிகழ்ச்சிகளும் இடம்பெறும்,

## பஸ்ஸுக்கு சிறுமி பலி

பளை, செவ்வாய்

இ. போ. ச. பஸ் ஒன்றினல் மூன்று வயதுடைய பிள்ளை ஒன்று மோதப்பட்டு ஸ்தலத்திலேயே மரணமான பரிதாப சம்பவம் [illegible] இடம்பெற்றுள்ளது. [illegible] இது சம்பந்தமாக விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# 40-க்கு அதிக அமெரிக்க விமானங்கள் சேதம்

## வியட்காங் தாக்குதலின் விளைவு

சைகோன், ஆக. 24

சைகோனின் வடகிழக்கே இருக்கும் அமெரிக்காவின் பின்ஹோா விமானத் தளத்தை நேற்று வியட்காங் கொரில்லாக்கள் பீரங்கிகளால் தாக்கியதுகாரணமாக 40க்கதிகமான விமகனங்கள் சேதமடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையே வடக்கு வியட்னமில் அமெரிக்க விமானங்கள் நேற்றுமேலும் தாக்குதல்கள் நடத்தி நீர் மின்சார நிலையமொன்றையும் மற்றும் பல கட்டடங்களையும் நாசமாக்கியுள்ளனர்.

தென்வியட்னமில் வியட்காங் கொரில்லாக்கள் கூட்டாக இருக்கும் ஒரு இடத்தில் நேற்று அமெரிக்க தென்வியட்னம் விமானங்கள் தாக்குதல்கள் நடத்தின. இத்தாக்குதலில் ஏற்பட்ட சேத விபரம் குறித்து உடனடியாக அறிவிக்கப்படவில்லை.

## அரங்கேற்றம்

ஊர்காவற்றுறை, செவ்.

ஊர்காவற்றுறை— பருத்தியடைப்பைச் சேர்ந்த சங்கீதபூஷணம் செ. செல்வச்சீரானின் (அண்ணாமலை பல்கலைக்களகம்) இசை அரங்கேற்றவிழா பருத்தியடைப்பு கதிரேசானந்த வித்தியாசாலையில் நடைபெற்றது.

தீவுப்பகுதி எம். பி. திரு வி. நவரத்தினம் தலைமையில் நடந்த அரங்கேற்ற விழாவில் வட்டுக்கோட்டை எம்.பி. திரு ஏ. அமிர்தலிங்கமும், திருமதி அமிர்தலிங்கமும் கலந்துகொண்டனர். பலபிரமுகர்கள் ஆசியுரை வழங்கினர்கள்.

## ஆலயபரிபாலன சபைக்கூட்டம்

ஊர்காவற்றுறை, புதன்

சரவணை ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி ஆலய பரிபாலன சபைக் கூட்டம் திரு. செல்வத்துரை தலைமையில் நடைபெற்றது. பின்வருபவர்கள் புதிய உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. சி. செல்வத்துரை. காரியதரிசி திரு. மு. திருநாவுக்கரசு, காரிய நிர்வாக சபையினராக திருவாளர்கள் வெ. பசுபதிப்பிள்ளை, இ. நடனசபாபதி, மு. கணபதிப்பிள்ளை, அ. பேரம்பலம்; கு. குழந்தைவேலு ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்,

## எம். பி. க்களின் அலவன்ஸ்

### உயர்த்த கட்சித் தலைவர்கள் யோசனை

கொழும்பு, செவ்வாய்

பார்லிமெண்டிலுள்ள கட்சித் தலைவர்களின் அடுத்த கூட்டத்தில் எம். பி.க்களின் அலவன்ஸ்களை உயர்த்தும் யோசனைபற்றி ஆராயப்படும்.

## விடுதலை

ஊர்காவற்றுறை, செவ்.

நெடுந்தீவு வாசிகளான வி. நடராசா, எம், வேலுப்பிள்ளை, எஸ். முருகேசு. ரி. முருகேசு ஆகிய நால்வரும் ஒன்று சேர்ந்து நெடுந்தீவு மேற்கு வாசியான எம். நடராசா என்பவருக்கு காயம் விளைவித்ததாகவும், எம். வேலுப்பிள்ளை கத்தியால் குத்திக் காயம் விளைவித்ததாகவும் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு விசாரணையின்பின் ஊர்காவற்றுறை மஜிஸ்டிரேட் எதிரிகளை விடுதலை செய்தார்.

## குடிதண்ணீர்த் திட்டம்

மன்னர், புதன்

மன்னர்ப் பகுதியில் ஏற்பட்டிருக்கும் குடிதண்ணீர் கஷ்டத்தை நீக்கும்பொருட்டு பட்டினசபை எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாக, கூடுதலான கிணறுகள் தோண்டப்பட்டு இயந்திரங்களும் அமைக்கப்படவிருக்கின்றன. இக்குடிதண்ணீர்த் திட்டம் இவ்வருட முடிவில் பூர்த்தியாகிவிடுமென்றும், அதன்பின் தினந்தோறும் நான்கு மணித்தியாலமாவது தண்ணீர் விநியோகம் நடைபெறுமென்றும் தெரியவருகிறது.

## திருட்டு வழக்கு

மன்னர், புதன்

ஆகஸ்ட் மடுத் திருவிழாவிற்கு வந்ததாகக் கூறப்படும் யாத்திரீகர் ஒருவரின் பணத்தைக் களவாடியதாக குற்றம் சாட்டப்பட்ட மன்னர் பனங்கட்டிக் கொட்டிலில் வசிக்கும் இளைஞரான திரு. ச. வின்சன்ற் என்பவரை மன்னர் நீதிபதி திரு. ஓ. கே. செனிவிரத்தின சரீரப் பிணையில் போகுமாறு உத்தரவிட்டு மேல் விசாரணையை இம்மாதம் 30 ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## தற்காலிக வேலைநீக்கம்

மன்னர், புதன்

கணக்குப் பரிசோதனைப் பகுதியினரால் நடாத்தப்பட்ட திடீர் பரிசோதனை ஒன்றின் போது மன்னர் கூட்டுறவு வங்கியில் 26,000 ரூபா குறைவாக இருந்ததாகக் கண்டுபிடித்தனர். இக்குறைபாட்டைத் தொடர்ந்து வங்கியைச் சேர்ந்த 3 உத்தியோகத்தர்கள் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

## இந்தோனேஷியாவுக்கு சாலைஅமைப்பு

ஜாகர்த்தா, ஆக, 25

சுமாத்திராவுக்கு ராஜபாட்டைஅமைப்பதற்காகப் பெரிய சாலைஅமைப்பு இயந்திரங்களை ஜெர்மன் ஜனநாயகக் குடியரசிடமிருந்து வாங்குவதற்கு இந்தோனேஷியா முன்வந்துள்ளது. 26 லட்சம் பெறுமதியான நிலம் தோண்டும் பிரமாண்டமான இயந்திரங்களையும், புல்டோசர்களையும், தரையைச்சமப்படுத்தும் இயந்திரங்களையும் ஜெர்மன் ஜனநாயக்குடியரசு ஒரு நீண்ட கடன் திட்டத்தின்கீழ் இந்தோனேஷியாவுக்கு கொடுத்துதவும்.

## எதிரிவிடுதலை

சாவகச்சேரி, புதன்

கச்சாய் கொலைமுயற்சி வழக்கு சாவகச்சேரி மஜிஸ்டிரேட் கோர்ட்டில் நீதிபதி திரு பி. ரூபேட் சில்வா முன்னிலையில் கடந்த வாரம் விசாரணை செய்யப்பட்டு விசாரணை முடிவில் நீதிபதி தீர்ப்பைக் கூறுவதற்காக வழக்கை ஒத்திவைத்தார்.

இன்று தீர்ப்பை வழங்கும் பொழுது நீதிபதி எதிரியை விடுதலை செய்தார். எதிரி சார்பில் திரு ஆர். டி. சிவகுரு ஆஜரானர்.

## சிறுபான்மை . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நாட்டில் இன, மத வேறுபாடுகளை நீக்குவதில் தேசிய அரசாங்கம் நம்பிக்கைகொண்டுள்ளது. இவ்வித அமைப்பில் அமைந்த நாட்டில்தான் அமைதி நிலவும்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் [illegible] ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26- திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org